சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.

அசல் வழக்கு எண். **195/2020**

வா.சா.**1**- பாண்டியன், நாள் - **19.06.2024.**

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-

யார் மீது வழக்குப் போட்டுள்ளேன் என்றால் 1 முதல் 4 என் தாயார் மற்றும் சகோதர சகோதரிகள் மற்றும் 5ம் பிரதிவாதி சொத்தை கிரையம் வாங்கியவர்களுக்கு எதிராக வழக்குப் போட்டுள்ளார். எத்தனை இலக்கச் சொத்துக்கு வழக்குப் போட்டுள்ளேன் என்றால் சர்வே எண். 235/1 பி-யில் 44-1/2 செண்டும், 235/2பி - 35 செண்டுக்கும் வழக்குக் போட்டுள்ளேன். என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் மேற்படி 2 இலக்கச் சொத்துக்களும் மீண்டும் எனக்கு வேண்டும் என பரிகாரம் கோரியுள்ளேன். மேற்படி 2 இலக்கச் சொத்துக்களும் என் தகப்பனாருக்குப் பாத்தியப்பட்ட பூர்வீகச் சொத்துக்களாகும். என் தகப்பனார் பெயர் ஆறாம்புலித்தேவர் ஆகும். என் அப்பாவிற்கு 2 இலக்கச் சொத்துக்கள் மட்டும்தான் பாத்தியப்பட்டதாகும். வேறு சொத்துக்கள் இருக்கிறதா என்றால் 3 ஏக்கர் சொத்துக்கள் உள்ளது. அது சுயசம்பாத்திய சொத்தாகும். மேற்படி 3 ஏக்கர் சொத்து எங்குள்ளது என்றால் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா, கல்லடிப்பட்டி கிராமத்தில் உள்ளது. மேற்படி 2 இலக்கச் சொத்துக்களும், 3 ஏக்கர் சொத்தும் என் அப்பா காலத்தில் ஒத்திவைக்கப்பட்டது என்றால் சரிதான். என் அப்பா காலமாகும்வரை மேற்படி ஒத்தி திருப்பப்படவில்லை என்றால் சரிதான். என் அப்பா இறந்த பின்னர், அவரின் 5 வாரிசுகளும் மேற்படி ஒத்தியை திருப்பவில்லை என்றால்சரிதான். அவ்வாறு ஒத்தியாக இருந்த சொத்தில்தான், வழக்கிடை சொத்தை 1 முதல் 4 பிரதிவாதிகள், 5 பிரதிவாதிக்கு அவர்கள் பாகத்தை கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான் எனக்கும், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் இடையே எவ்வளவு

நாட்களாக கருத்துவேறுபாடு இருக்கிறது என்றால் என் அப்பா இறந்ததிலிருந்து உள்ளது. நானும், என் தகப்பனார் காலமான பின்பு 1/5 பாக ஒத்தி தொகையை கட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் கூலி வேலை பார்க்கிறேன். 1 முதல் 4 பிரதிவாதிகள், 5ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த போது, எனது பங்கினை 5ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்க சேர்ந்து கிரையம் பேசினேன் என்றால் இல்லை. 1 முதல் 4 பிரதிவாதிகள், 5ம் பிரதிவாதிக்கு கிரையம் பேசியபோது எனக்கு நன்கு தெரியும் என்றால் தெரியாது. எப்போது தெரிந்துகொண்டேன் என்றால் கிரையம் முடித்து, 2 அல்லது 3 மாதங்களில் தெரிந்துகொண்டேன். அவ்வாறு தெரிந்தபோது சட்ட நடவடிக்கை எடுத்தேன் என்றால் வாயினால் கேட்டேன். பஞ்சாயத்தும் பேசினேன். எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் கொடுத்தார்கள் என்று நான் கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை. தற்போது வரைக்கும் தெரியாது. வழக்கில் 5ம் பிரதிவாதி போட்ட பதில் வழக்குரையை நான் படித்துத் தெரிந்துகொள்ளவில்லை. கேட்டும் தெரிந்துகொள்ளவில்லை. பதிலில் சென்ட் ரூ.15,000/- வீதம் பேசி கிரையம் முடித்ததாக குறிப்பிட்டுள்ளார், அது எனக்குத் தெரியும் என்றால் எனக்குத் தெரியாது. கிரையம் முடிப்பதற்கு முன்னரே 1 முதல் 4 பிரதிவாதிகள் என்னை அணுகி கேட்டதாகவும், நான் மேற்படி தொகைக்கு உடன்படாததால் 1 முதல் 4 பிரதிவாதிகள், 5ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. நானும், 5ம் பிரதிவாதியிடம் என்னுடைய பங்கினை கூடுதல் தொகைக்கு வாங்கச் சொல்லி வற்புறுத்தினேன், அதற்கு 5ம் பிரதிவாதி மறுத்ததால் நான் இந்த வழக்குப் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதி அவரின் எதிர் உரையில் சொன்ன சென்ட் ரூ.15,000/- என்பதை மறுத்து நான் பதில் எதுவும் போடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் 05.03.2014 ஆம் தேதியிட்டஒத்திப் பத்திரத்தில் கண்ட 2வது கையெழுத்து என் கையெழுத்து கிடையாது. மேற்படி ஒத்திப் பத்திரத்தை

இடைநிலை மனு எண். 77/2020 -இல் 5ம் பிரதிவாதி தரப்பில் எ.ம.சா.ஆ-1. ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனை நான் மறுத்து பதில்உரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி தாவா சொத்தை என்ன உரிமையில் மீண்டும் எனக்கு கிரையம் கொடுக்க வேண்டும் என கேட்கிறேன் என்றால் வாரிசு சொத்து என்பதால் கேட்கிறேன். மேற்படி சொத்தின் தொகையை 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு செலுத்தத் தயாராக இருப்பதாக நான் எந்த வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். என் பிராதில் 5ம் பிரதிவாதி, 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு கொடுத்த கிரையத் தொகையை வட்டியுடன் சேர்த்து நான் செலுத்தத் தயாராக இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி தொகையை வட்டியுடன் சேர்த்து நீதிமன்றத்தின் வைப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி மிரட்டி கூடுதலாக பணம் கேட்டு இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 19.06.2024.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.